# கௌரவமான பராமரிப்பு முறைமைகளுக்கான அனைவருக்குமான சமூகப் பாதுகாப்பு




## முன்னுரை

இலங்கையின் சமூகப் பாதுகாப்பு முறைமைகளில் உள்ள ஆழமான கட்டமைப்புச் சார்ந்த சிக்கல்களைப் பொருளதார நெருக்கடிகளும் காலநிலை அதிர்ச்சிகளும் அரச செலவினத்தைக் குறைத்து வருமானத்தினை அதிகரிப்பதற்கான அரசின் கொள்கைகளும் அம்பலப்படுத்தியுள்ளன. இவ்வாறான பல்பரிமாண அதிர்ச்சிகளில் இருந்து உழைக்கும் வர்க்கத்தினையும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களையும் பாதுகாப்பதில் அசுவெசும போன்ற திட்டங்கள் போதியவை அல்ல என நிதர்சனமாகக் காட்டியுள்ளன. இந்தச் சமுதாயங்கள் பொதுவாக முறைசாராப் பொருளாதாரத்தினைக் கொண்டுள்ள கொழும்பு போன்ற நகர்ப்புறப் பிரதேசங்களில் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய பல நெருக்கடிகள் வருமான இழப்புக்கும் உணவுப் பாதுகாப்பின்மைக்கும் பொருளாதார உறுதியின்மைக்கும் மீள முடியாத கடன்களுக்கும் இட்டுச்சென்றுள்ளன.

இந்தத் தாக்கங்கள் ஒரு பால்நிலையினருக்கு அதிக தாக்கம் ஏற்படுத்துபவையாக, அதாவது பெண்களுக்கு, குறிப்பாக உழைக்கும் பெண்களுக்கு அதிக தாக்கம் ஏற்படுத்துபவையாக இருப்பதுடன் இப்பெண்களே இதன் பெரும் சுமையினைச் சுமப்பவர்களாக இருக்கின்றனர். இவர்களே வீட்டில் முதலாவதாக உணவினைத் தவிர்க்கின்றனர், மின்சாரத்தினைச் சேமிக்க வேண்டும் என்பதற்காக நேரத்தினை மீதப்படுத்தும் மின்சாரச் சாதனங்களை உபயோகிக்காதிருக்கின்றனர், குடும்பச் செலவுகளைச் சமாளிக்க மேலதிக தொழில்களைப் பொறுப்பேற்பவர்களாகவும் இருக்கின்றனர்.

பரந்த அடிப்படையில் இலக்குவைக்கப்படாத காசு மாற்றங்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் குறுகிய கால நிவாரணத்தினை மாத்திரமே வழங்குவதுடன், பராமரிப்புத் தொடர்பாக ஒரு பால்நிலையினரிடம் இருந்து மாத்திரம் கடமைகள் எதிர்பார்க்கப்படுவதாலும் முறைசாராத் தொழில்களாலும் அங்கவீனத்தினாலும் வயதினாலும் கடனினாலும் வீடமைப்பினாலும் அல்லது காலநிலை அபாயநேர்வுக்கு முகங்கொடுப்பதாலும் கட்டமைக்கப்படும் கட்டமைப்பு ரீதியான பாதிப்புறுநிலைகளையும் சமத்துவமின்மைகளையும் இவை கருத்திற்கொள்வதில்லை.

சமூகப் பாதுகாப்பு என்பது கட்டாயம் நிலைமாற்றமிக்கதாகவும் சகல தனிநபர்களினதும் சமுதாயங்களினதும் சமூக ஒப்புரவு மற்றும் கௌரவம் என்பவற்றில் கவனம் குவிப்பவையாகவும் இருக்கவேண்டும். பாதிப்புறுநிலை என்பது இயங்குதிறன் மிக்கது மற்றும் வாழ்க்கை வட்டத்தினை அடிப்படையாகக் கொண்டது என்பதை அங்கீகரிப்பதன் மூலம் பொதுச் சேவைகளில் அரச முதலீடு மேற்கொள்ளப்பட வேண்டுமென அனைவருக்குமான சமூகப் பாதுகாப்பு அழைப்பு விடுக்கின்றது.

**“ தண்ணீர் மற்றும் மின்சாரக் கட்டணங்கள் மிக அதிகமாக உள்ளன. அவற்றைச் செலுத்தியவுடன் முழு அஸ்வெசும கொடுப்பனவும் தீர்ந்துவிடுகிறது. ”**

**- குசுமா***

* அனைத்து பெயர்களும் அநாமதேயமாக்கப்பட்டுள்ளன.

COLOMBO URBAN LAB

unicef for every child

## பிரதானமாகக் கண்டறிந்தவைகள்

பொருளாதார மீளல் பற்றிய தேசிய புள்ளிவிபரங்கள் வாழ்க்கை யதார்த்தங்களைப் பிரதிபலிப்பதில்லை என்பதை கொழும்பில் நாம் பொருளாதார நெருக்கடியின் போதும் பொருளாதார நெருக்கடியின் பின்னரும் நடத்திய ஆய்வு வெளிக்காட்டுகின்றது. நெருக்கடியின் தாக்கத்தினை உழைக்கும் வகுப்பினர்கள் இன்னும் உணர்கின்றனர். டிட்வா சூறாவளியின் பின்னர் இது மோசமாக்கப்பட்டுள்ளது.

தாக்கங்கள் பல அடுக்குகளைக் கொண்டவை, ஒரு பால்நிலையினருக்கு அதிக பாதிப்புக்களை ஏற்படுத்துபவை, மற்றும் பராமரிப்புப் பொறுப்புக்களுடன் பிணைந்தவை. பாரம்பரியப் பராமரிப்பு முறைமைகள் புலம்பெயர்தலாலும் புதிய இடங்களுக்கு மாறிச் செல்வதாலும் பலவீனப்படுத்தப்படுகின்றன. பராமரிப்பின் உட்கட்டமைப்புக்கள் போதியதாக இல்லை என்பதுடன் இவை அரிதாகவே பெரிய பிள்ளைகள், அங்கவீனமான பிள்ளைகள், முதியவர்கள் மற்றும் பாரமரிப்பு வழங்குபவர்கள் போன்றோரின் பராமரிப்புப் பற்றிக் கருத்திற்கொள்கின்றன. பெண்கள் நீடித்த நேரப் பற்றாக்குறைக்கும் கொடுப்பனவுக்காகச் செய்யும் வேலையினைப் பராமரிப்புடன் சமனிலைப்படுத்துவதற்கும் முகங்கொடுக்கின்றனர்.

உழைக்கும் வர்க்கக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் வெளி வியாபாரம் மற்றும் வீட்டு வேலை போன்ற முறைசாராத் தொழில்களையே பெரிதும் சார்ந்துள்ளனர். இவர்கள் கிரமமற்ற ஈட்டல்களைப் பெறுவதுடன் தொழில் பாதுகாப்பற்றவர்களாகவும் உள்ளனர். பராமரிப்புப் பொறுப்புக்கள் காரணமாகவும் காலநிலை அதிர்ச்சிகள் காரணமாகவும் அல்லது சுகவீனம் காரணமாகவும் இவர்கள் தங்களின் வேலைகளைத் தவறவிடுகின்றமை பொருளாதார நிலையின்மையினையும் உணவுப் பாதுகாப்பின்மையினையும் மோசமாக்கலாம். இவை அனைத்தும் பாரம்பரிய சமூகப் பாதுகாப்பு முறைமைகளில் புறக்கணிக்கப்படுகின்றன.

அசுவெசும போன்ற நிகழ்ச்சித்திட்டங்கள் சகல குடும்பங்களையும் உள்ளடக்காத காரணத்தினால் இவை குடும்பங்களுக்கு அர்த்தபூர்வமான ஆதரவினை வழங்குவதில்லை. குடும்பங்கள் உணவுகளையும் மருந்துகளையும் வாங்குவதற்கும் பயன்பாட்டுக் கட்டணங்களைச் செலுத்துவதற்கும் முறைசாராக் கடன் முறைமைகளின் மூலம் பணத்தினைக் கடனாகப் பெறும் நிலைக்குத் தள்ளப்படுகின்றன.

குடும்பங்கள் காலநிலை அதிர்ச்சிகளுக்கு எதிராகப் பாதுகாக்கப்படுவதில்லை. சமூகப் பாதுகாப்பின்மை என்பதன் அர்த்தம் நகரத்திலுள்ள தொழிலாளர்கள் காலநிலையினைப் பொருட்படுத்தாமல் அவர்களின் ஆரோக்கியத்தினையும் நலனோம்பலையும் சமரசம் செய்து தொடர்ந்து வேலை செய்கின்றனர் என்பதேயாகும். சுகவீனம், களைப்பு மற்றும் வருமான இழப்பு என்பன பெண்களின் பராமரிப்புச் சுமையினை அதிகரித்து அவர்களுக்கு நேரம் போதாதிருப்பதை இன்னும் மோசமாக்குகின்றது.

## பரிந்துரைகள்

நாட் பராமரிப்பு நிலையங்கள், பிள்ளைக் காப்பகங்கள், மற்றும் பாடசாலை முடிந்த பின்னரான நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற சமுதாயத்தினை மையப்படுத்திய பராமரிப்புக்கான நகர வசதிகள் கட்டாயம் விஸ்தரிக்கப்பட்டு நன்கு வளமிடப்படல் வேண்டும். இந்த வசதிகள் பாதுகாப்பானவையாகவும் தாங்கத்தக்கவையாகவும் இருக்கவேண்டும் என்பதுடன் பொருத்தமான உட்கட்டமைப்பினையும் கொண்டிருக்க வேண்டும். அத்துடன், ஓர் ஒழுங்குறுத்தல் அமைப்பினால் கண்காணிக்கப்பட்டு மேற்பார்வை செய்யப்படல் வேண்டும்.

பாடசாலை உணவு நிகழ்ச்சித்திட்டங்கள் அனைத்து வயதினையும் உடைய பிள்ளைகளின் போசாக்கினை மேம்படுத்துவதற்காக ஆரம்பப் பாடசாலைக்கு அப்பால் செல்லவேண்டும். இவை பெண்களின் நேரம் போதாமையினைக் குறைத்து, பிள்ளைகளின் பாடசாலை நேரத்துடன் பொருந்துகின்ற வருமானப் பிறப்பாக்க வாய்ப்புக்களைப் பெண்களுக்கு வழங்குகின்றன. இவை பாடசாலைகளில் மாணவர் வரவினை முன்னேற்றி குடும்பத்தின் வரவு செலவுத்திட்டத்தில் நிதிச் சுமைகளை நிவர்த்தி செய்கின்றன.

இவர்கள் முறைசார்த் துறைத் தொழிலாளர்களைப் போன்று அதே உரிமைகளையும் பாதுகாப்புக்களையும் பெறுகின்றனர் என்பதை உறுதிப்படுத்துவதற்கு முறைசாராத் துறையில் தொழிலாளர்களுக்கு ஆகக் குறைந்த ஊதியங்கள், கட்டாயக் கொடுப்பனவுடனான விடுப்பு, பிரசவ நலன்கள், ஒப்பந்தங்கள், மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களினுள் உள்ளடக்கம் என்பன உள்ளிட்ட சட்டப் பாதுகாப்புக்கள் அவசியமானதாகும்.

அதிகரித்து வரும் வெப்பத்தின் தாக்கத்தில் இருந்து வெளிப்புறங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கு காலநிலையுடன் தொடர்புடைய பாதுகாப்புக்கள் அவசியமானவையாகும். இது நிழல் வழங்கும் வசதிகள், பொது நீர்க் குழாய்கள், குளியலறைகள், மற்றும் சிறந்த தானியங்கிப் பொருள் விற்பனை வசதிகள் போன்ற பொது உட்கட்டமைப்புக்களில் முதலீடு செய்வதைக் குறிக்கலாம்.

அனைவருக்குமான சமூகப் பாதுகாப்பினை வழங்குவது என்பது ஒருங்கிணைக்கப்பட்ட தரவு முறைமைகளைத் தேவைப்படுத்துகின்றது. பதிற்செயற்பாடு, மீளல் மற்றும் உதவி என்பன உள்ளடக்கும்தன்மை உடையனவாக உள்ளன மற்றும் யதார்த்தமிக்கவையாக உள்ளன என்பதை உறுதிப்படுத்துவதற்கு, குடும்ப வருமானம் பற்றிய, பராமரிப்புப் பொறுப்புக்கள் பற்றிய, அங்கவீனம், சுகாதாரம், வீடமைப்பு மற்றும் காலநிலைக்கு முகங்கொடுத்தல் பற்றிய தரவுகள் சேகரிக்கப்பட்டுக் கிரமமாக இற்றைப்படுத்தப்படல் வேண்டும்.

இலங்கை, சமூகப் பாதுகாப்பு முறைகளைப் படிப்படியாக வலுப்படுத்தி, மீளலானது சமுதாயங்கள் வெறுமனே அவற்றின் நாளாந்த வாழ்க்கையினை வாழ்வதற்கு அவற்றினை இயலுமாக்குவதற்கு அப்பால் செல்கின்றது என்பதை உறுதிப்படுத்த வேண்டும். நிலைமாற்றமிக்க சமூகப் பாதுகாப்பு இருக்கையில், மக்கள் அவர்களின் வாழ்க்கைக் காலத்தினுள் சிறந்த வாழ்க்கைத் தரத்தினை அனுபவிக்கின்றனர்.

@colombourbanlab
csf-asia.org/colombo-urban-lab